லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN : 2278-2311
VOL: 15 APRIL - 2026 ISSUE: 2

# ஒப்பாய்வு நோக்கில் ஆத்திச்சூடிகள்

**வெ.சிவகாமி**
பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சேலம்-636011.

**முன்னுரை**

மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் நோக்குடன் உருவான இலக்கியங்களே நீதி இலக்கியங்கள் ஆகும். தமிழில் இவ்வகை இலக்கியங்கள் மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவற்றில் ஆத்திச்சூடி மிகச் சிறந்த நீதி நூலாக விளங்குகிறது. எழுத்துக்களின் வரிசைப்படி அமைந்த குறளளவு வரிகளால் வாழ்க்கையின் அடிப்படை அறநெறிகளை எடுத்துரைப்பதே இதன் சிறப்பாகும். தமிழ் நீதி இலக்கிய மரபில் ஆத்திச்சூடி ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. சங்ககால மரபை அடிப்படையாகக் கொண்டு அவ்வையார் இயற்றிய ஆத்திச்சூடி மனித வாழ்க்கைக்கான அடிப்படை ஒழுக்க நெறிகளை எடுத்துரைக்கிறது. அதனைத் தொடர்ந்து, இருபதாம் நூற்றாண்டின் சமூகச் சூழலை பிரதிபலிக்கும் வகையில் பாரதியார் புதிய ஆத்திச்சூடியை இயற்றினார். இவ்வாய்வு, அவ்வையார் ஆத்திச்சூடியையும் பாரதியார் ஆத்திச்சூடியையும் ஒப்பாய்வு நோக்கில் ஆய்வு செய்து, அவற்றில் கருத்தியல், மொழிநடை, சமூக நோக்கு மற்றும் காலச்சார்பு வேறுபாடுகளை வெளிப்படுத்துகிறது என்பதனை ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆத்திச்சூடி விளக்கம்**

ஆத்திச்சூடி என்பது தமிழில் சமூக நெறி ஒழுக்கம் மற்றும் நேர்மையை நாடும் ஒரு நீதி நூல்கள் ஆகும்.

**காலச்சார்பு வேறுபாடு**

12 ஆம் நூற்றாண்டில் தென்இந்தியாவில் சைவ சமயம் செழித்து இருந்ததை அக்கால ஔவையார் தமது ஆத்திச்சூடியில் சிவன் பிள்ளையார் போன்ற தெய்வங்களை குறிப்பிட்டுள்ளார்.

**“ஆத்திச்சூடி அமர்ந்த வேந்தனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே”1**

நாம் திருவாத்தி பூமாலையை அணிபவராகிய சிவபெருமான் விரும்பிய கணபதி கடவுளை வணங்குவோம் என்றார். 19 ஆம் நூற்றாண்டில் பாரதியார் படைத்த புதிய ஆத்திச்சூடியில் விடுதலை உணர்வை உணர்த்தும் வகையில் அனைத்து மதத்தினையும் குறிப்பிட்டுள்ளார்

**“உருவகத்தாலே உணர்ந்துணராது**
**பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்**
**ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்**
**அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்”2**

இவ்வாறு பல மதத்தினரும் வழிபடும் பரம்பொருள் ஒன்றுதான். அதன் இயல்பு அறிவும்ஒளியும் ஆகும் என்று பாடியுள்ளார்.

**கடவுள் மனிதன் கோட்பாடுகள்**

அவ்வையார் கடவுள் நம்பிக்கையை மையமாகக் கொண்டா் அதனால் **அறமே தெய்வம்** என்ற சிந்தனை வெளிப்படுத்தினாா். பாரதியாா் மனித சக்தியை மையமாகக் கொண்டாா் **மனிதனே தெய்வம்** என்ற கருத்தை வெளிப்படுத்தினாா்

**அச்சம் நீங்கிய அறம்**

சைவ சமயம் செழித்து வளா்ந்த காலகட்டத்தில் திருத்தொண்டு விருந்தோம்பல் ஆகிய நற்பண்புகள் மக்களிடத்தில் ஏற்றம் பெற கண்ட ஔவையாா் தமது ஆத்திச்சூடியில்

**“அறம் செய விரும்பு”**3

என்று அறத்தின் விழுமியத்தை மக்களிடம் பரப்பினாா்.பாரதியாா் வாழ்ந்த காலத்தில் மக்கள் ஆங்கிலேயா்களுக்கு அடிமைப்பட்டு கிடந்தனா்.நமது நாடு ஆங்கியோ்களுக்கு அஞ்சி பயந்து வாழ்ந்தது. இந்த அச்ச உணா்வை போக்க விரும்பிய பாரதியாா் தமது ஆத்திச்சூடியில்

**“அச்சம் தவிர்”**4

என்று கூறி மக்களுக்கு சுதந்திர உணா்வை ஊட்டும் வகையில் துவங்கியுள்ளாா்.

**தொன்மை மறவாத அறம்**

பழமையைப் போற்ற வேண்டும் அதுவே சிறந்த அறம் என்று ஔவையாா் தமது ஆத்திச்சூடியில் **தொன்மை மறவேல்** என்று வலியுறுத்துகின்றாா். பாரதியாா் தமது ஆத்திச்சூடியில் காலத்திற்கு ஏற்ற புதுமைகளை புகுத்தி **வேதம் புதுமை செய்** என தமது ஆத்திச்சூடியில் குறிப்பிடுகிறாா். காலத்தின் போக்கிற்கு ஏற்ப பழமையை போற்றி புதுமை சிந்தனைகளை உருவாக்க வேண்டும் என்று இந்நூல்கள் குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

**இடத்திற்கு ஏற்ற அறம்**

ஔவையாா் தமது ஆத்திச்சூடியில் **ஆறுவது சினம்** உலக உயிா்களிடத்தில் கோபம் படாமல் அன்புடன் நடத்தல் வேண்டும் என்றாா்.மேலும் **கடிவது மறவேல்** யாரிடமும் கோபத்துடன் பேசுதல் கூடாது என்றும். **சுளிக்கச் சொல்லேல்** மனம் வருந்தும்படி சொற்களைக் கூறக் கூடாது என்றும் கூறுகின்றாா். ஆனால் பாரதியாா் ஔவையாரின் கருத்துக்கு எதிராக **ரௌத்திரம் பழகு** என்கிறாா்.

**ஆன்மீக அறங்கள்**

ஔவையாா் தெய்வகளை பணிய வேண்டும் என்று தமது ஆத்திச்சூடியில் குறிப்பிடுகிறாா்.

**“திருமாலுக்கு அடிமை செய்**

**தெய்வம் இகழேல்”**5

பாரதியின் ஆத்திச்சூடியில்

**“தெய்வம் நீ என்று உணா”**6

தெய்வம் என்பது நாம் தான் என அனைத்து மனிதா்களும் உணர வேண்டும் என புதிய சிந்தனையை மனித சமுதாயத்திற்கு தமது அறவுரையாகக் கூறகின்றாா். ஔவையின் ஆத்திச்சூடியில் பெண்கள் கூறும் சொற்களை இச்சமுதாயம் கேட்கக்கூடாது. **தையல் சொல் கேளேல்** என குறிப்பிடுகிறாா். பாரதியின் புதிய ஆத்திச்சூடியில்

**தையலை உயா்வு செய்** பெண்களை உயா்வாக எண்ணுதல் வேண்டும் என பாரதியாா் தமது அறச்சிந்தனையைக் கூறுகின்றாா். ஔவையாா் தமது ஆத்திச்சூடியில் தொன்மையான சாத்திரங்கள் புராணங்கள் சடங்குகள் ஆகியவற்றை மறவாது மனதில் நிறுத்த வேண்டும். தொன்மை மறவேல் என்றாா். பாரதியின் ஆத்திச்சூடியில்

**“தொன்மைக்கு அஞ்சேல்**

**புதியன விரும்பு**

**வேதம் புதுமை செய்”**7

புதுமை மிகுந்த அறக்கருத்துகளை பதிவு செய்கின்றாா். ஔவையாா் தமது ஆத்திச்சூடியில் தோல்வி உறுதி என்று தெரிந்த பின் எந்த காரியத்தையும் தொடராதே கைவிட்டுவிடு **தோற்பன தொடரேல** என்றாா். பாரதியின் ஆத்திச்சூடியில் **தோல்வியில் கலங்கேல்** தோல்விநிலைக் கண்டு கலங்குதல் கூடாது என்கிறாா். துன்பம் விளைவிக்கும் எந்த செயலையும் செய்யக்கூடாது என்கிறாா். ஔவையாா் தமது ஆத்திச்சூடியில் பிறரின் உயிரினைப் பறிக்கின்ற போா் பிறரின் மனதினை வாட்டுகின்ற வீண் சண்டைகளில்

ஈடுபடக்கூடாது என்பதை **போர்த்தொழில் புரியேல் முனைமுகத்து நில்லேல்** என அறிவுறுத்துகின்றார். ஆனால் பாரதி புதிய ஆத்திச்சூடியில் நாடு வெள்ளையனுக்கு அடிமைப்பட்டு கிடக்கும் சமயத்தில் புதிய ஆத்திசூடியைப் படைக்கும் பாரதி நாட்டு மக்களுக்கு உணர்வினைத் தூண்டும் வகையில்

**"போர்த்தொழில் பழுகு**
**முனையிலே முகத்து நில"8**

என காலமாற்றத்திற்கு ஏற்ப தமது அறக்கருத்துக்களைப் பதிவு செய்கின்றார்.

**அவ்வையார் ஆத்திச்சூடி – பின்னணி**

அவ்வையார் இயற்றிய ஆத்திச்சூடி குழந்தைகளுக்கான ஒழுக்கக் கல்வி நூலாகக் கருதப்படுகிறது. இதன் முக்கிய அம்சங்கள்

எளிய மொழிநடை அறம், அடக்கம், பொறுமை போன்ற பண்புகள் தனிநபர் ஒழுக்கத்தை மையமாகக் கொண்ட அறநெறியாக விளங்குகின்றன. 'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்' போன்ற வரிகள் மனித வாழ்க்கைக்கான அடிப்படை நெறிகளை எடுத்துரைக்கின்றன.

**பாரதியார் ஆத்திச்சூடி – சமூக நோக்கு**

பாரதியார் இயற்றிய ஆத்திச்சூடி, அவ்வையாரின் வடிவமைப்பைப் பின்பற்றினாலும், அதன் கருத்தியல் முற்றிலும் நவீனமானது. இதன் முக்கிய அம்சங்கள் சுதந்திர சிந்தனை சமூக சமத்துவம் பெண்சாதி விடுதலை தைரியமும் புரட்சியும் ஆகும். 'அச்சமில்லை', 'ஆணும் பெண்ணும் சமம்' போன்ற வரிகள் சமூக மாற்றத்தைக் குறிக்கின்றன.

**கருத்தியல் ஒப்பீடு**

| | |
|---|---|
| அவ்வையார் | பாரதியார் |
| அறநெறி | சமூகநெறி |
| தனிநபர் அறம் | சமூக அறம் |
| மரபுசார் சிந்தனை | புரட்சிகர சிந்தனை |
| அடக்கம், பொறுமை | தைரியம், சுதந்திரம் |

**பெண்கள் மற்றும் கல்வி குறித்த பார்வை**

அவ்வையார் பெண்களுக்கு ஒழுக்கத்தை வலியுறுத்துகிறார். பாரதியார் பெண்சாதிக விடுதலையையும் சம கல்வி உரிமையையும் வலியுறுத்துகிறார். இதன் மூலம் பாரதியார் ஆத்திச்சூடி சமூக சீர்திருத்த இலக்கியமாக விளங்குகிறது. ஔவையின் ஆத்திச்சூடியில் பெண்கள் கூறும் சொற்களை இச்சமுதாயம் கேட்கக்கூடாது. **தையல் சொல் கேளேல்** என குறிப்பிடுகிறார். பாரதியின் புதிய ஆத்திச்சூடியில். **தையலை உயர்வு செய்** பெண்களை உயர்வாக எண்ணுதல் வேண்டும் என பாரதியார் தமது அறச்சிந்தனையைக் கூறுகின்றார்.

**ஆத்திச்சூடியின் இலக்கியப் பின்னணி**

**பழைய ஆத்திச்சூடி – இலக்கியச் சூழல்**

பழைய ஆத்திச்சூடி சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கிய மரபை சேர்ந்தது. சமூக ஒழுக்கம் தனி மனித பண்பு வாழ்க்கை நெறி ஆகியவை இதன் மையமாகும். "அறம் செய விரும்பு"அறம் வாழ்க்கையின் அடிப்படை என்பதை இவ்வரிகள் வலியுறுத்துகின்றன.

**புதிய ஆத்திச்சூடி – காலப்பின்னணி**

பாரதியார் வாழ்ந்த காலம் அடிமைத்தனமும் சமூக அடக்கமுறைகளும் நிறைந்த காலம். அதனால் அவரது ஆத்திச்சூடியில் சுதந்திரம் சமத்தும் சுயமரியாதை ஆகிய கருத்துகள் முதன்மை பெறுகின்றன. 'அச்சமில்லை அச்சமில்லை' பயமற்ற சிந்தனையை பாரதியார் வலியுறுத்துகிறார்.

**நோக்க வேறுபாடு**

**பழைய ஆத்திச்சூடியின் நோக்கம்**

பழைய ஆத்திச்சூடி மனிதனை நல்லொழுக்கம் உடையவனாக உருவாக்குவதே நோக்கம் 'கற்பக் கசடு அற' கல்வி மனிதனை சீர்செய்ய வேண்டும் என்ற அறநெறி கொண்டது.

**புதிய ஆத்திச்சூடியின் நோக்கம்**

புதிய ஆத்திச்சூடி சமூக மாற்றத்தையும் விடுதலையையும் நோக்கமாகக் கொண்டது. ‘சாதி இரண்டொழிய வேறில்லை’ சாதி வேறுபாடுகளை மறுக்கும் புரட்சிகர சிந்னையை வெளிப்படுத்துகின்றன.

**மொழிநடை மற்றும் சொல்லாட்சித்திறன்**

**பழைய ஆத்திச்சூடி– மொழிநடை**

மிக எளிய சுருக்கமான குழந்தைகளுக்குப் புரியும் நடை கொண்டது.

**“தீயினால் சுட்ட புண் ஆறும்**
**நாவினால் சுட்ட வடு ஆறாது”9**

புதிய ஆத்திச்சூடி– மொழிநடை

உணர்ச்சிமிக்க எழுச்சியூட்டும் புரட்சிகர மொழிநடை

“பெண்மை வாழ்க” பெண்சாதியின் மேன்மையைப் புகழ்கிறது.

**ஒப்பாய்வு அட்டவணை**

| அம்சம் | பழைய ஆத்திச்சூடி | புதிய ஆத்திச்சூடி |
|---|---|---|
| காலம் | அற இலக்கிய காலம் | தேசிய இலக்கிய காலம் |
| நோக்கம் | தனி மனித ஒழுக்கம் | சமூக மாற்றம் |
| அறம் | தனிப்பட்ட நெறி | சமூக நெறி |
| மொழி நடை | எளிமை | எழுச்சி |

அவ்வையாரின் ஆத்திச்சூடி நிலையான சமூக அமைப்பை பாதுகாக்கும் நோக்குடன் உருவானது. பாரதியார் ஆத்திச்சூடி சமூகத்தை மாற்றும் நோக்குடன் உருவானது. இதனால்

ஔவையார் → ஒழுக்க மனிதன்

பாரதியார் → புரட்சிகர மனிதன்

என்ற இரு மாறுபட்ட மனித உருவாக்கக் கோட்பாடுகளை முன்வைக்கின்றனர். இதனால் இவ்விரு ஆத்திச்சூடிகளும் தத்தம் காலத்தின் சமூக தேவைகளுக்கு ஏற்ப உருவானவை என்பதை உணர முடிகிறது.

**முடிவுரை**

ஆத்திச்சூடிகள் இரண்டும் மனித சமுதாயத்திற்கு அறவுரைக்கூறும் காலத்தால் மறைக்க இயலாத நீதி இலக்கிய நூல்கள் ஆகும். காலமாற்றத்தினால் புதிய ஆத்திச்சூடியில் ஔவையின் ஆத்திச்சூடியில் உள்ள அறவுரைகளை பாரதி மறுத்து அந்த அறவுரைகளுக்கு எதிராக தமது கருத்துகளை அறவுரைகளாகப் பதிவு செய்கின்றார் இந்த ஒப்பாய்வின் வழியாக கால மாற்றத்திற்கு ஏற்ப அறக்கருத்துகளும் சிந்தனைகளும் மாறும் என்பதை அறிகின்றோம்.